# சபை வளர்ச்சியின் அறைகூவல்

சபை வளர வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். இந்த வகையில், பெரும்பாலான சபை நடத்துனர்கள் விரும்புகின்ற விஷயமானது தேவனுடைய விருப்பத்துடன் ஒத்துப்போகின்றது.

கடந்த காலத்தில் சபை வளர்ந்துள்ளது. 1964ல் "அமெரிக்க சபைகள் ஆண்டுப் புத்தகத்தின்படி, கிறிஸ்துவின் சபைகள் மிக வேகமாய் வளரும் மத அமைப்புகளாகவுள்ளன மற்றும் கடந்த இருபது ஆண்டுகளாக இவை இவ்வாறுள்ளன" என்று தகவல் அறிவிப்புக் கட்டுரைகள் அறிவித்தன. சபையானது 1941 முதல் 1961 வரையில் 580 சதவிகிதம் வளர்ச்சியடைந்துள்ளதாக அந்த ஆண்டுப் புத்தகம் சுட்டிக்காண்பித்தது![1]

இருப்பினும், அமெரிக்காவில் கர்த்தருடைய சபையின் வேகமான வளர்ச்சியானது முடிவுற்றது மற்றும் அதைத் தொடர்ந்து ஒரு சமான நிலை அல்லது ஒரு சிறிது வீழ்ச்சி ஏற்பட்டது என்பதைப் புள்ளியியல் சுட்டிக் காண்பிக்கின்றது. சமீபத்திய வருடங்களில்தான் அமெரிக்காவில் உள்ள கிறிஸ்துவின் சபைகள் அவற்றை முழுமையாய்க் கருதப்படும் வகையில், மீண்டும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.[2]

கர்த்தருடைய சபையில் உள்ள நடத்துனர்கள், தாங்கள் வழிநடத்துகின்ற சபைகள் வளர்ச்சியடைவதில்லை என்ற உண்மையை அடிக்கடி ஒப்புக் கொள்ளுகின்றனர். சபை நடத்துனர்கள் சபை வளர வேண்டும் என்று விரும்புகின்ற நிலை உண்மையாய் இருந்த போதிலும், பல ஆண்டுகள் கடந்து சென்ற பின்பும் பல சபைகள் (உறுப்பினர்களின் எண்ணிக்கையில்) அதே அளவுடையவாய் உள்ளன, மற்றும் சில சபைகளில் வீழ்ச்சி காணப்படுகின்றது. புள்ளியியல் ரீதியாக (உறுப்பினர்த்துவம், வருகை மற்றும் காணிக்கைகளில்) வளர்ந்து கொண்டுள்ள சபைகள்கூட "உண்மையான" வளர்ச்சியை அனுபவிக்காமல் இருக்கலாம். அவர்கள் கிறிஸ்துவின் பிற சபைகளில் இருந்து உறுப்பினர்களை ஆதாயப் படுத்திக் கொண்டிருக்கலாம், ஆனால் - உள்ளூர் சபைக்குப் பயனளிக்கின்ற வகையில் - எவரொருவரையும் ஞானஸ்நானப்படுத்தாமல் இருக்கலாம், இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கூட்டாமல் இருக்கலாம்.

மெதுவான வளர்ச்சியின் அல்லது வளர்ச்சியின்மையின் பிரச்சனையை எவ்வாறு தீர்த்து வைப்பது என்பதைக் கண்டறிதலே சபை வளர்ச்சியின் அறைகூவலாக உள்ளது.

இப்பிரச்சனைக்கு நாம் தீர்வுகளை ஆலோசனையாகத் தருவதற்கு முன்னர், தேவன் சபை வளர்ச்சியைக் கட்டளையிடவில்லை என்பதை

நாம் கவனிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மாறாக, தேவன் (உண்மைத் தன்மையை) விசுவாசம் நிறைந்த தன்மையையே கேட்டுக் கொள்கின்றார். அவர் தம்முடைய வார்த்தையை நாம் உண்மையுடன் பிரசங்கிக்க மற்றும் போதிக்க வேண்டும் என்று கட்டளையிடுகின்றார். ஒரு சபையானது தேவனுடைய வார்த்தையை உண்மையுடன் போதித்து வந்தால், எண்ணிக்கையில் வளர்ச்சியடையாத போதிலும் அவரை பிரியப் படுத்தச் சாத்தியக் கூறுள்ளது. இருந்த போதிலும், அவர் (எண்ணிக்கை வளர்ச்சி உட்பட) சபை வளர்ச்சியை விரும்புகின்றதால், வளருவதற்கான வழிகளைத் தேடுவது நமக்கு ஏற்புடையதாகவே உள்ளது. இங்கு சபை வளர்ச்சிக்கு உதவக்கூடிய சில ஆலோசனைகள் தரப்படுகின்றன, இவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் சபை வளர்ச்சிக்கு அவை உதவக்கூடும். சபை வளர்ச்சிக்கான இந்த ஏழு படிநிலைகளை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.[3]

## படி 1: சபை வளர வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் என்பதை உணர்ந்து அறியுங்கள்

இழந்துபோகப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே மனித இனத்திற்கான தேவனுடைய சித்தமாக உள்ளது என்பதை நாம் முதலாவதாக உணர்ந்தறிய வேண்டும் (லூக். 19:10; 2 பேது. 3:9). தேவன், சபையின் வளர்ச்சியில் தமக்குள்ள ஆர்வத்தை, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இழந்துபோகப்பட்ட நிலையில் இருப்பவர்களைப் பற்றிய தமது கவலையை வெளிப்படுத்துவதன் மூலம் செயல்விளக்கப்படுத்தியுள்ளார். “பூமியில் உள்ள சகல குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்” படியாக (ஆதி. 12:3) அவர் ஆபிரகாமை அழைத்தார். அவர் தம் செய்தியும் இராஜ்யமும் உலக முழுவதும் பரவ வேண்டும் என்ற தம் விருப்பத்தைச் சுட்டிக் காண்பித்தார் (ஏசா. 11:9; ஆப. 2:14; தானி. 2:35). இராஜ்யம் வளரும் என்று இயேசு போதித்தார், அது கடுகு விதை போன்றும் புளித்த மாவு போன்றும் செயல்படும் என்று அவர் ஒப்பிட்டார் (மத். 13:31-33). அவரைப் பின்பற்றுபவர்கள் “சகல இனங்களையும் சீஷராக்க” வேண்டும் (மத். 28:19; இ.வ. மாற். 16:15; லூக். 24:47) என்பதே அவரது கட்டாயக் கட்டளைகளாக இருந்தன. அப்போஸ்தலர்கள் “பூமியின் கடைசி பரியந்தமும்” (அப். 1:8) சாட்சிகளாய் இருந்தனர். நிறைவாக, பரலோகத்தில் “சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் … ஆகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து … சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்” (வெளி. 7:9) என்ற காட்சி நடைபெறும்.

அப். நட. புத்தகத்தில் “வளர்ச்சி அறிக்கைகளை” பல இடங்களில் உள்ளடக்க லூக்காவை தேவன் ஏவியதில் சபை வளர்ச்சியின் மீது தேவனின் ஆர்வம் அதிகத் தெளிவாய்க் காணப்படுகின்றது. பெந்தெகொஸ்தே நாளன்று ஏறக்குறைய 3000 பேர் கிறிஸ்தவர்களானார்கள் (2:41). தினந்தோறும் (மக்கள்) சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு (2:47)

விரைவிலேயே சபையில் 5,000 ஆண்கள் இருந்தார்கள் (4:4). அதன் பிறகு, திரளான கூட்டத்தாராகிய ஆண்களும் பெண்களும் சரீரத்திற்குள் (சபைக்குள்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (5:14), மற்றும் சீஷர்களின் எண்ணிக்கையானது தொடர்ந்து வளர்ந்தது (6:1, 7; 9:31; 16:5). மாறுபட்ட இடங்களில் "அநேகர்" (9:42), "அநேக ஜனங்கள்" (11:21), "அநேக ஜனங்கள்" (11:24), "திரளான ஜனங்கள்" (14:1), "அநேகர்" (14:21), "திரளான ஜனங்கள்" (17:4). "அநேகம் பேர்" (17:12) மற்றும் "அநேகர்" (அப். 18:8) கிறிஸ்தவர்களானார்கள். இதன் விளைவாக, "தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று" (அப். 12:24), "கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (13:49), மற்றும் "இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" (19:20).

இழந்துபோகப்பட்டவர்கள் மீதான தேவனுடைய அக்கறையானது "தேவன் நம்மோடு இருக்கிறார்" என்பவரான கிறிஸ்துவிலும் மெய்ப்பிக்கப்படுகின்றது. சபை வளர்ச்சியின் மீது இயேசுவின் ஆர்வமானது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

*கிறிஸ்து பின்வருபவனவற்றின்மீது பிரியமாயிருப்பதில்லை:*

- *(மீன்) பிடிக்காமல் மீன் பிடி வேலையில் ஈடுபட்டிருத்தல்*
- *காலியான விருந்து மேசைகள்*
- *விதைத்து(ம்) அறுக்காதிருத்தல்*
- *கனி தராத அத்தி மரம்*
- *மந்தைக்குள் கொண்டு வராத காணாமற் போன ஆடுகள்*
- *தேடியும் கண்டறியப்படாத காணாமற் போன நாணயம்*
- *அறுத்துச் சேர்க்கப்படாத விளைச்சல்*
- *பதில்செயல் இல்லாத அறிவித்தல்*
- *பிதாவின் இல்லத்திற்குப் புறம்பே உள்ள மகன்கள் மற்றும் மகள்கள்*[4]

தேவன், எண்ணிக்கையிலான வளர்ச்சியுடன் மட்டும் திருப்தியடைவதில்லை; அத்துடன் சபையானது ஆவிக்குரிய வகையிலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (எபே. 4:11-16). அத்துடன், எண்ணிக்கைக்காக நாம் சத்தியத்தைத் தியாகம் செய்வதையும் அவர் விரும்புகிறதில்லை (யோவா. 17:17). இருந்தபோதிலும், இழந்துபோகப்பட்டவர்களுக்காக தேவனுடைய அன்பை நாம் பகிர்ந்து கொள்பவர்களாய் இருக்க வேண்டுமென்றால், நாம் சபையின் எண்ணிக்கை வளர்ச்சியிலும் - இழந்து போகப்பட்டவர்களில் இயன்ற அளவு அதிகமானவர்களை மீட்டு கொண்டு வருதலை நாடுதலிலும் - ஆர்வமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

## படி 2: ஜெபியுங்கள்

சபையானது வளர வேண்டுமென்றால், சபையானது ஜெபிக்க வேண்டும். ஏன்? முதலாவதாக, சபையின் வளர்ச்சியானது முற்றிலுமாக நம்மைச் சார்ந்ததாக இருப்பதில்லை. அது கேட்கின்றவர்களின் ஏற்றுக்

கொள்ளும் தன்மையைச் சார்ந்துள்ளது. விதைப்பவனின் உவமையானது (மத். 13:1-23) நமக்கு, ஒரே விதைப்பவன், ஒரே வகையான விதையை, ஒரே விதமான முறைகளைப் பயன்படுத்தி, விதைக்க முடிந்து, இருப்பினும் கூட, விளைவானது கேட்கின்றவர்களின் ஏற்றுக் கொள்ளும் தன்மையைப் பொறுத்து மாறுபடும் என்று போதிக்கின்றது. இது தேவனைச் சார்ந்ததாகவும் உள்ளது, ஏனெனில் அவரே விளையச் செய்கின்றார் (1 கொரி. 3:6). ஏற்றுக்கொள்ளக்கூடிய இருதயங்களுக்காகவும் தேவன் நமக்கு விளைச்சலைக் கொடுப்பதற்காகவும் நாம் ஜெபிப்பது அவசியமாய் இருக்கிறது. இரண்டாவதாக, ஜெபம் என்பது செயல் விளைவுடையதாக இருக்கிறது. நாம் கேட்டால், தேடினால், தட்டினால், நாம் எதிர்பார்ப் பதைப் பெற்றுக் கொள்வோம் என்றும் (மத். 7:7, 8), நாம் தேவனுடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார் என்றும் நாம் கேட்பதைப் பெற்றுக் கொள்கிறோம் (1 யோவா. 5:14, 15) என்றும் அறிய முடிகின்றது. மூன்றாவதாக, இயேசு நமக்கு, “அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்” (மத். 9:38) என்று உரைத்துள்ளார். சபை வளர வேண்டும் என்று சபை நடத்துனர்கள் உண்மையாகவே விரும்பினால் சபையானது ஜெபிக்கும்படி ஊக்கமூட்டுதலே அவர்கள் தொடங்க வேண்டிய மிகச் சிறந்த வழியாக உள்ளது.

## படி 3: சபையானது வளருவதற்கு உதவி செய்யத் தீர்மானம் செய்தல்

சபை வளருவதற்கு, தனி நபர்கள் அதன் வளர்ச்சிக்கு உதவ தீர்மானிக்க வேண்டும். சபை வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுகள், எவ்விடத்திலும் சபை வளரத் தொடங்கும் பொழுது, அது ஒரு நபரின் (வழக்கமாக சபை ஊழியர், பிரசங்கியார் அல்லது சபையின் பிற நடத்துனர் என்பவரின்) தீர்மானத் தினாலேயே பெரும்பாலும் நடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. சபை வளரும்படி செய்ய வேண்டும் என்ற தீர்மானம் செய்யும் தனி நபர்கள் தேவனுடைய உதவியுடன் எந்த ஒரு சபையின் வளர்ச்சியிலும் திறவுகோலாக உள்ளனர்.

சபை வளருவதற்கு உதவி செய்யத் தொடங்குவதற்கு ஒரு உறுப்பினர் தாம் செய்வதற்கு ஒரு பணிப் பொறுப்பு தரப்படும் வரை காத்திருக்கத் தேவையில்லை. அவர் உடனடியாக அதைத் தொடங்க முடியும். அவர் கிறிஸ்துவின் உதவியுடன் தம்மால் முடிந்ததைச் செய்யத் தீர்மானித்தலே போதுமானது; உண்மையுள்ளவராயிருத்தல்; ஆவிக்குரிய வகையில் வளருதல்; பலவீனர்களை உற்சாகப்படுத்துதல்; தவறிப் போனவர்களைத் திரும்பக் கொண்டு வருதல்; மற்றும் இழந்துபோனவர்களை ஆதாயப் படுத்துதல். இந்த நல்ல ஊழியங்களைச் செய்வதிலிருந்து எவரொருவரும் கிறிஸ்தவர்களைத் தடை செய்ய முடியாது. கிறிஸ்தவர்கள் இவைகளைச் செய்தால், பிறர் செய்கின்றவைகள் அல்லது செய்யத் தவறுகின்றவைகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சபை வளரக் கூடும்.

## படி 4: சபை வளர்ச்சிக்கு இலக்குகளை அமையுங்கள்

இலக்குகளை அமைத்தல்[5] என்பது நான்கு முதல் ஏழு வரை உள்ள படிகளின் செயல்முறையின் ஒரு பகுதியாகவே தொடர்கின்றது. சபை வளர்ச்சிக்கான திட்டத்தின் செயல்முறையில் முற்பகுதியிலேயே சபையானது நீண்ட கால இலக்குகளைப் பற்றிச் சிந்திக்க தொடங்க வேண்டும் என்பதால் இவ்விடத்தில் நாம் இதைப்பற்றிக் கூறுகின்றோம். சபையின் திட்டங்களில் இலக்குகளை வடிவமைப்பதிலும் இலக்கு வடிவமைக்கும் அமர்வுகளிலும் ஈடுபடுவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். உறுப்பினர்களால் ஆலோசனை யளிக்கப்படும் இலக்குகள் நிறைவான இலக்குகளாக நீண்ட கால இலக்கு களாக, குறுகிய கால இலக்குகளாக, மற்றும் முன்னேற்றத்திற்கு உதவும் இலக்குகளாக மேம்படுத்தப்படும் வரையிலும் அவைகளை சபை நடத்துனர் கள் முன்னிலும் சிறப்புடையதாக்கலாம்/குறை நீக்கம் செய்யலாம். இந்த இலக்குகளிலிருந்து சபை வளர்ச்சிக்கான சபையின் உபாயம் உதித்தெழும். பின்பு, சபையின் ஊழியத்திற்கான பாகமாகும் எல்லாத் திட்டங்களும் அந்த இலக்குகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட முடியும். அவைகள் சபையின் குறிக்கோள்களின் நிறைவேற்றத்தில் பங்களித்தால், அவைகளைத் தக்க வைத்து மேம்படுத்த வேண்டும். அவைகள் அதைச் செய்யவில்லை யென்றால் நீக்கப்பட வேண்டும்.

## படி 5: கடந்த கால வளர்ச்சியையும் நிகழ் கால நிலையையும் ஆய்வு செய்யுங்கள்

சபை வளர்ச்சிக்கான குறிப்பிட்ட ஒரு திட்டத்தை நடத்துனர்கள் வடிவமைக்கத் தொடங்குமுன், சபை (ஊழியத்தை) எவ்வாறு செய்திருந்தது மற்றும் எவ்வாறு செய்து கொண்டுள்ளது என்பதை அவர்கள் தீர்மானிப்பது அவசியமாய் உள்ளது. அவர்கள் எங்குள்ளனர் மற்றும் அவர்களுக்குக் கிடைக்கும் ஆதாரவளங்கள் யாவை என்பதை அவர்கள் அறியாத வரையில், அவர்கள் தாங்கள் செல்ல விரும்பும் இடத்திற்குச் செல்ல இயலாது.

### கடந்த கால வளர்ச்சியை ஆராயுங்கள்

கடந்த கால வளர்ச்சியை ஆராய்வதற்கு, எவராவது ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி, தற்சமயம் வரை சபையின் வளர்ச்சியைக் காண்பிக்கும் வளர்ச்சி வரைபடம் ஒன்றைத் தயாரிக்க முடியும். எடுத்துக் காட்டாக, கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டிலும் ஞாயிறு ஆராதனைக்கு வந்த சராசரி நபர்களின் எண்ணிக்கையைப்[6] பயன்படுத்தி இவ்வரைப்படத்தைத் தயாரிக்க இயலும். அளவுப் படத்தின் கோடானது நேராக மேல் நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ செல்கிறதா அல்லது பல "மேல் நிலைகளும்" "கீழ் நிலைகளும்" உள்ளதா என்று நடத்துனர்கள் கவனித்தறிய முடியும். அடுத்ததாக அந்தக் கால வேளையில்

எத்தனை பேர் சபைக்குள் வந்தனர் மற்றும் அவர்கள் எவ்வாறு வந்தனர் என்று அவர்கள் தீர்மானிக்க முடியும். அவர்கள் ஞானஸ்நானத்தினால் (சபைக் குடும்பங்களில் இருந்தோ அல்லது ''உலகத்திலிருந்தோ'') வந்தார்களா, மீளக்கட்டமைத்ததினால் வந்தார்களா? அல்லது உறுப்பினர்த்துவத்தின் வைப்பினால் வந்தார்களா? அவர்கள், எத்தனை பேர் சபையை விட்டு வெளிச் சென்றனர், எவ்வாறு வெளிச் சென்றனர் (இறப்பினால், விழுந்து போகுதலினால் அல்லது இடம் மாறிச் சென்றதினால்) என்று தீர்மானிக்க முடியும். கடைசியாக, "ஏன்?" என்று அவர்கள் கேட்க முடியும். அளவுப் படத்தில் ஏன் இத்தனை ''மேல் நிலைகள்'' மற்றும் ''கீழ் நிலைகள்'' உள்ளன? புதிய உறுப்பினர்களை ஆதாயப்படுத்துவதில் சபை ஏன் வெற்றி பெற்றது அல்லது வெற்றி பெறவில்லை? சபையானது உறுப்பினர்களை இழந்தது ஏன்? காரணம் ஒருவேளை பணியாளர்களினால் (சபை நடத்துனர்கள், பிரசங்கியார்கள் அல்லது உறுப்பினர்கள் ஆகியோர்களால்), திட்டங் களினால், அல்லது சமூகத்தின் மக்கள் தொகையினால் (மற்றும் அதன் இயல்பு மாற்றத்தினால்) ஏற்பட்டதாய் இருக்கலாம்.

கடந்த கால வளர்ச்சியை ஆராய்வதால் என்ன நன்மை கிடைக்கின்றது? இது சபைக்கு உற்சாக மூட்டுதலை அளிக்கலாம். நடத்துனர்கள் மக்களை ஞானஸ்நானப்படுத்தி இரட்சிக்கப்பட்டவர்களைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் அவர்கள் நினைத்ததைக் காட்டிலும் சபையானது நன்றாய் செய்கின்றது என்பதைக் கண்டறியலாம்; வளர்ச்சியில் தங்கள் குறைவானது சில உறுப்பினர்கள் மரணத்தினால் ஏற்பட்டது என்பதை அவர்கள் கண்டறியலாம் மற்றும், பலர் சமுதாயத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்றதினாலும் அக்குறைவு உண்டானது - இவையிரண்டுக்குமே சபையைப் பழி கூற முடியாது - என்பதையும் கண்டறியலாம். மேலும் இது, மீண்டும் திரும்பச் செய்யப்படத் தகுதியான திட்டங்கள் யாவை மற்றும் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை யாவை என்பது பற்றியும் ஆலோசனை அளிக்கலாம். வேறு எவ்விடத்திலும் உள்ளது போலவே, சபையிலும் நாம் கடந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்ளாவிட்டால், மீண்டும் அதை(யே) செய்து அழிவிற்குள்ளாகின்றோம்.

## நிகழ்கால நிலைமையை ஆராயுங்கள்

சபையின் நிகழ்கால நிலைமையைக் குறித்து இரண்டு அம்சங்கள் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும்: நாம் நமது உண்மையான சூழ்நிலையை யும் நமது வலிவுகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

சபையின் உண்மையான சூழ்நிலையை ஆராய்வதில், சபை நடத்துனர்கள் "நாம் எவ்வாறு பணியாற்றுகின்றோம்?" என்று கேட்பது அவசியமாக உள்ளது. பின்வரும் ஆய்வுப் பட்டியலானது வளர்ச்சியின் மூன்று பகுதிகளை மதிப்பீடு செய்ய அவர்களுக்கு உதவும்:

எண்ணிக்கை வளர்ச்சியை ஆராயுங்கள்: (1) தற்போதைய உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் வருகை என்ன? (2) சமீபத்தில் எத்தனை பதில் செயல்கள் இருந்துள்ளன? (3) கடந்த ஆண்டில் உறுப்பினர் எண்ணிக்கை,

*வருகை மற்றும் பதில்செயல்கள் எத்தனை? (4) கடந்த ஆண்டில் எத்தனை பேர், எவ்வாறு சபையை விட்டு வெளியே சென்றனர்?*

*ஆவிக்குரிய வளர்ச்சியை ஆராயுங்கள்: (1) வருகை, காணிக்கை, ஈடுபாடு மற்றும் முழுமையான சபை என்ற வகையில் கிறிஸ்துவைப் போன்ற எண்ணப் போக்குகள் ஆகியவற்றின் தர அளவு என்னவாக உள்ளது? (2) ஒவ்வொரு தனி உறுப்பினருக்கும் அது என்னவாக உள்ளது?*

*உயிர் வளர்ச்சியை ஆராயுங்கள்: ஒவ்வொரு தனி உறுப்பினருக்கும் தேவன் கொடுத்துள்ள தாலந்துகளை அவர் அல்லது அவள் பயன்படுத்தி சரீரத்தின் (சபையின்) மதிப்பு மிக்க பணிபுரியும் உறுப்பினராவதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வாய்ப்பளிப்பதில் சபை வளருகின்றதா? (1) சபையின் செயல்பாடுகளில் புதிய உறுப்பினர்கள் ஈடுபடுகின்றனரா? (2) புதிய நடத்துனர்கள், போதகர்கள், உதவியாளர்கள் மற்றும் பாடல் நடத்துனர்கள் சமீபத்திய ஆண்டுகளில் பயிற்றுவிக்கப்பட்டு பணியமர்த்தப் பட்டுள்ளனரா? (3) தாலந்துகளின் மேம்பாட்டிற்கு சபை வகையளித் துள்ளதா? (4) தற்போதைய உறுப்பினர்கள் கொண்டுள்ள திறன்கள் யாவை? (5) அவர்கள் கொண்டுள்ள திறன்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற னவா? (6) கர்த்தருடைய ஊழியத்தில் தனது திறமைகளைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படுவதாக ஒவ்வொரு உறுப்பினரும் நம்புகின்றாரா?*

*ஒரு சபையின் வலிவை ஆராய்வதில், "நம்மால் செய்யக் கூடியவை யாவை?" என்று கேளுங்கள். சபையின் வலிவைத் தீர்மானிப்பதில் சபை நடத்துனர்கள் சில கேள்விகளைக் கேட்பது அவசியம்:*

*பணியாளர்களைப் பற்றிக் கேளுங்கள்: உறுப்பினர்த்துவம் இப்பொழுது என்னவாக உள்ளது? சபையின் உறுப்பினர்களுடைய வயது மற்றும் பாலினம் என்ன? அவர்களின் சமூக பொருளாதார நிலை, கல்விப் பின்புலம், இனம் அல்லது பிரிவுக்குழுவின் தன்மை, மற்றும் உறுப்பினர் களின் வேலை முதலியவை யாவை? சபையில் காணப்பட வேண்டிய குடும்ப அலகின் வகை என்ன? மற்றும் சபையின் குடும்பங்கள் எவ்விதத்தில் உறவுபட்டுள்ளன? ஒவ்வொரு உறுப்பினரின் ஆர்வங்கள், செய்யக் கூடியவைகள் மற்றும் திறமைகள் யாவை? தற்சமயத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் சபையில் என்ன பணி நிலையை (எ.கா. போதகர், உதவிக் காரர், மூப்பர்) நிரப்புகின்றார்? கடந்த காலத்தில் ஒவ்வொருவரும் என்ன செய்துள்ளனர்?*

*எதிர்கால நிலைமை பற்றிக் கேளுங்கள்: என்ன வகையிலான உறுப்பின ரல்லாதவர்கள் ஒழுங்காக தவறாது வருகின்றனர்? உறுப்பினரல்லா தவர்களின் இல்லத்திலிருந்து வேதாகம வகுப்புகளுக்கு அடிக்கடி வருகின்ற பிள்ளைகள் யாவர்?*

*திட்டங்களைப் பற்றிக் கேளுங்கள்: வசனத்தைப் பிரசங்கிக்கவும் ஆத்துமாக்களை இரட்சிக்கவும் தற்சமயம் என்ன செய்யப்படுகின்றது? இந்தத் திட்டங்கள் எவ்வளவு தூரம் செயல்வலிவுள்ளவையாக இருக்கின்றன?*

*மக்கள் தொகையைப் பற்றிக் கேளுங்கள்: சபை நிலவுகின்ற சமுதாயத் தின் பண்புகள் யாவை? ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக மாறும் குழுக்கள்*

யாவை? சமுதாயம் முன் வைக்கின்ற விசேஷித்த வாய்ப்புகள் யாவை?

சபையின் தற்போதய சூழ்நிலை மற்றும் அதன் வலிவு ஆகியவற்றைத் தீர்மானிப்பதினால் சபை நடத்துனர்கள், என்ன திட்டங்கள் ஏற்படுத்தலாம், எந்தத் திட்டங்கள் செயல்படும் என்று அறியக் கூடிய நிலையிலும், கர்த்தர் திறந்துள்ள வாய்ப்பின் கதவுகள் யாவை என்று காண்பதிலும் மிகச் சிறந்து விளங்குவார்கள்.

## படி 6: சபை வளர்ச்சிக்குத் திட்டங்களை ஏற்படுத்துங்கள்

இலக்குகளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், சபையின் கடந்த கால மற்றும் தற்போதைய நிலைமை பற்றி ஆராய்வதற்கும் நேரம் செலவிட்ட பின்பு, சபை நடத்துனர்கள் சபையின் உதவியுடன் எதிர்கால வளர்ச்சிக்காகத் திட்டமிட வேண்டும்.[7]

### பொதுவான உபாயங்கள்

வளர்ச்சிக்கான திட்டங்களில், சபைகள் எல்லாவற்றிற்கும் பொதுவான சில உபாயங்களும் உள்ளடங்கும். அவற்றில் சில பின்வருமாறு:

(1) *வெற்றியடையும் எண்ணப்போக்கை உருவாக்குங்கள்,* நேர்மறையான உணர்வை, வளர்ச்சிக்கு உகந்ததான ஒரு சூழ்நிலையை மேம்படுத்திக் கொள்ளுங்கள். உள்ளூர் சபை பற்றிய நேர்மறையான உருவகம் ஒன்றை கொண்டிராத வரையில் அதன் உறுப்பினர்கள் "நற்செய்தியை" பரப்ப மாட்டார்கள்.

(2) *நட்புறவான ஒரு சபையாக ஆகுங்கள்,* வெளியே உள்ளவர்களை மனங்குளிர வரவேற்கும் திறந்த மனப்பான்மையுள்ள ஒரு சபையாக ஆகுங்கள். சபையானது "பயனாளிகளுக்கு நட்புறவானதாக" ஆக்கப் படுவதற்கு, நடத்துனர்கள், சபையை - அதன் உறுப்பினர்களை, வசதிகளை, திட்டங்களை மற்றும் ஆராதனையை பார்வையாளர்களின் கண்ணோக்கில் கண்டு, பார்வையாளர்களை வரவேற்பதாய் ஆக்குவதற்கு (ஆவிக்குரிய எல்லைகளுக்குள்ளாக) எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

(3) *சுவிசேஷ அறிவித்தலை வலியுறுத்துங்கள்* - விசேஷமாக சுவிசேஷ ஊழியத்தில் ஒவ்வொருவரும் உதவி செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துங்கள். இழந்துபோகப்பட்டவர்களை மனம் மாற்றுவதினால் சபை வளர வேண்டுமென்றால், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் அவசியத்தை, முக்கியத்துவத்தை நடத்துவத்துவமானது வலியுறுத்த வேண்டும். மத்தேயு 28:19, 20 வசனப்பகுதியானது "மாபெரும் ஆலோசனை" அல்ல, ஆனால் அது "பிரதான கட்டளை" என்பதை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். சொந்த நாட்டிலும் வெளி நாட்டிலும் ஆத்துமாக்களை இரட்சிப்பது என்பது சபையின் விருப்பத் தேர்வுகளில் ஒன்றல்ல ஆனால் உண்மையில் அதுவே கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பணியாய் உள்ளது என்பதை நாம் விசுவாசித்து, போதித்து

அதன்படியே செயல்படுபவர்களாய் இருப்பது அவசியம்!

*(4) ஈடுபாட்டை உற்சாகப்படுத்துங்கள்.*[8] ஒவ்வொரு உறுப்பினரும் தனது திறன்களைப் பயன்படுத்தி ஈடுபாடுள்ளவராவது தமது தனிப்பட்ட பொறுப்பு என்பதை ஏற்றுக் கொண்டு செயல்பட்டால் சபை வளரும்.

*(5) பல விதமான முறைமைகளைப் பயன்படுத்துங்கள்.* ஒரே ஒரு முறைமையைப் பயன்படுத்துவதைக் காட்டிலும் சுவிசேஷ ஊழியத்திற்குப் பல வித முறைமைகளைப் பயன்படுத்துவதினால் சபைகள் அதிகமான மக்களை ஆதாயப்படுத்தும் என்று சில ஆராய்வுகள் காண்பிப்பதாகக் காணப்படுகின்றது.

*(6) ஏற்றுக்கொள்ளும் குழுக்களை குறி வையுங்கள்.* எந்த ஒரு சமூகத்திலும் சில மக்கள் மற்றவர்களை விட அதிகமாய் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாய் உள்ளனர். (ஒவ்வொருவருக்கும் நாம் விடுக்கும் பொதுவான வேண்டுகோளைக் கைவிட்டுவிடாமல்) இப்படிப்பட்டவர் களை அடைய முயற்சி செய்தல் என்பது ஒரு நல்ல கொள்கையாக உள்ளது.

*(7) விழுந்து போகுதலின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முயற்சி செய்யுங்கள்.*[9] உறுப்பினர்கள் விழுந்து போகுதலின் பிரச்சனையை எந்த ஒரு சபையும் எப்பொழுதும் முழுமையாகத் தீர்த்து வைக்காது, ஆனால், எந்த ஒரு சபையும் தனது பெரும்பாலான உறுப்பினர்களைக் காத்து வைக்க முடியாததாக இருக்கும் வரையிலும் அது வளரவும் வளராது.

*(8) ஆராதனை ஊழியத்தை வளமூட்டியதாக்குங்கள்.* ஒரு சபையின் ஆராதனை ஊழியமானது உறுப்பினர்களுக்கும் உறுப்பினரல்லாதவர் களுக்கும் வளமூட்டியதாயிருந்தால் சபையானது அதிகமாய் வளர்ச்சி பெறும் வாய்ப்புள்ளது. மிக முக்கியமாக, தேவன் நமது ஆராதனையினால் பிரியப்பட வேண்டும். உறுப்பினரல்லாதவர்கள் சபையைப் பற்றிய தங்களின் முதல் கருத்துப் பதிவை ஆராதனையில் தங்கள் அனுபவத் திலிருந்தே வரப் பெறுவார்கள். முதல் கருத்துப் பதிவுகள் முக்கியமானவை களாய் உள்ளன. நமது ஆராதனைகள் பார்வையாளர்களுக்கு உதவிகரமாய் இருந்தனவென்றால், அவர்கள் நமது போதனையை அதிக விருப்பத்துடன் கேட்பார்கள்.

*(9) விளம்பரம் செய்யுங்கள்.* விளம்பரப்படுத்துதல் என்பது தன்னி லேயே சபை வளர்ச்சியைக் கொண்டு வந்து விடாது, ஆனால் வளர்ச்சி ஏற்படக் கூடிய சூழ்நிலையை விளம்பரப்படுத்துதல் உண்டாக்கக் கூடும்.

## ஒரு திட்டவட்டமான உபாயம்

ஒரு சபையின் வளர்ச்சிக்கான திட்டமானது அந்த சபைக்கென்று விசேஷித்த வகையில் வடிவமைக்கப்பட்டதாயிருக்க வேண்டும். ஒவ்வொரு சபைக்கும் ஒரு குறிப்பிட்ட உபாயம் தேவைப்படுவது ஏன்? அது "திட்ட வட்டமான நடத்துவத்துவத்தின்" காரணத்தினால்தான்: சபை வளர்ச்சிக் கான குறிப்பிட்ட நிகழ்வின் காரணங்கள் குறிப்பிட்டவைகளாக, அந்த சபையில் காணப்படக்கூடிய காரணிகளின் கலவையுடன் தொடர்புடை யவைகளாக உள்ளன, ஆனால் இவைகள் இன்னொரு சபையிலிருந்து பிரதி எடுத்தது போலச் செய்யத் தேவையற்றவைகளாய் உள்ளன.

பொதுவாக, இது புரிந்து கொள்ளப்படுவதில்லை. நமது சகோதரத்துவத்தில் மாபெரும் வளர்ச்சியின் முன்னுதாரணமாகக் குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு சபையும் - மற்ற சபைகள் யாவும் “அது போலவே இயங்கவும் செய்யவும் வேண்டும்” என்ற முன் அனுமானத்துடன் உள்ளது - ஒரு குறிப்பிட்ட வகையான சமூகத்தில் காணப்படுகின்றது மற்றும் ஒரு குறிப்பிட்ட வகை உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது. சபைகள் தாங்கள் ஊழியம் செய்கின்ற சமூகத்தைப் பொறுத்து (மக்கள் தொகை நெருக்கத்தில், இன அல்லது இனக்குழுவின் அமைப்பில், சராசரி வயதில், மக்கள் தொகை பெருக்கம் அல்லது குறைவில்) மாறுபடுகின்றன என்பது இந்த முன் அனுமானத்தின் பிரச்சனையாக உள்ளது, மற்றும் உறுப்பினர்த்துவத்தில் அடங்கியுள்ள மக்களைப் (சராசரி வயது, சமூக பொருளாதர நிலை, திறமைகள் முதலியன) பொறுத்தும் இவை மாறுபடுகின்றன. பெரு நகரில் உள்ள ஒரு புதிய, செல்வாக்குமிக்க, வளருகின்ற புறநகர்ப் பகுதியில் - மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், பொறியாளர்களும் உள்ள பகுதியில் - சபை வளர்ச்சியை உண்டாக்கும் ஒரு திட்டமானது எந்த வித மாற்றமும் இன்றி இன்னொரு மாநிலத்தில் உள்ள ஒரு சிறு நகரத்திற்கு மாற்றப்பட்டுப் பயன்படுத்தப்பட முடியும் என்று கற்பனை செய்து கொள்வது ஒரு உண்மைக்கு மாறுபட்டதாகும்.

சபை நடத்துனர்கள் ஒரு திட்டவட்டமான உபாயத்தை எவ்வாறு அடைய முடியும்? இங்கு ஐந்து ஆலோசனைகள் உள்ளன:

முதலாவது, திட்டமிடுதல் என்பது “ஒருங்கமைக்கப்பட்ட” நிகழ்வுகளைக் கொண்டிருப்பது அவசியமல்ல என்பதை நினைவுகூருங்கள். நமது ஊழியம் எவ்வளவு குறைவாக “ஒருங்கமைக்கப்பட்டுள்ளதோ” அவ்வளவு அதிகம் சிறப்பானதாக உள்ளது. சபையின் இலக்கானது வேறு வழியில் நிறைவேற்றப்பட முடியாத போது மட்டுமே “ஒருங்கமைக்கப்பட்ட திட்டங்கள்” தொடங்கப் பெற வேண்டும்.

இரண்டாவது, சபையின் பலங்களை வலியுறுத்துங்கள். ஒவ்வொரு சபையும் தான் பலமாயுள்ள ஒன்று அல்லது அதற்கு அதிகமான பகுதிகளைக் கொண்டுள்ளது; அதன் திட்டங்கள் இந்த பலங்களைச் சுற்றி கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மூன்றாவது, இழந்து போகப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, தேவையில் உள்ளவர்களுக்கு உதவ, சபையைப் பெலப்படுத்த மற்றும் கர்த்தரை ஆராதிக்க மிகச் சிறந்த முறைகளை நாடுங்கள். ஒரு சபைக்கு மிகச் சிறந்த முறைமைகளாய் உள்ளவை இன்னொரு சபைக்கு மிகச் சிறந்த முறைமைகளாய் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. பொருளற்ற ஆர்வம் ஒவ்வொன்றையும் பின்பற்றும்படியான சோதனையைத் தவிர்த்து விடுங்கள்.

நான்காவது, பரந்த அளவில் திட்டமிடுங்கள். “ஒருங்கமைக்கப்பட்ட திட்டங்கள்” தேவையென்றால் அவைகள் சரியாக செய்யப்பட வேண்டும்! ஒரு நிகழ்ச்சிக்கான வெற்றிகரமான திட்டமானது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருக்கும்: (அ) யார் என்ன செய்கின்றனர்? (ஆ) ஒரு கால அட்டவணை, (இ) நிதி, (ஈ) விளம்பரம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல்,

(உ) நிகழ்ச்சி எவ்விதம் முடிய வேண்டும் (ஊ) பணியானது எவ்விதம் பின் தொடரப்பட வேண்டும்?

ஐந்தாவது, தொடர்ந்து திட்டமிடுங்கள். என்ன செய்யப்படுகின்றது என்பதை நடத்துனர்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்வதும், எதிர்காலத்திற்கென்று புதிய திட்டங்களை ஏற்படுத்துதலும் அவசியமானவைகளாய் உள்ளன. ஒவ்வொரு நிகழ்ச்சியுமே அது வெற்றிகரமானதாயிருப்பினும், தோல்விகரமானதாயிருப்பினும் அடுத்த நிகழ்ச்சிக்குத் தயாரிக்க உதவுவதற்கு ஒரு கற்றல் அனுபவமாய் இருக்க முடியும். ஒவ்வொரு ஆண்டின் திட்டமும் அடுத்த ஆண்டின் திட்டத்திற்கு ஒரு அடிப்படைப் பணியை இடுவதாய் இருக்கும்.

## படி 7: திட்டங்களைச் செயல்படுத்துங்கள்

திட்டங்கள் நடத்துனர்களின் சிந்தைகளில் மட்டும் அல்லது காகிதங்களில் மட்டும் உறுதிப்பட்டிருக்கும் வரையில் செயல்பட முடியாது. பணியானது திட்டமிடப்பட வேண்டும், ஆனால் திட்டமானது செயல்படுத்தப்பட வேண்டும். செய்யப்படுவதற்கு அவசியமானது என்ன?

முதலாவது, பணியானது தொடங்கப்பட வேண்டிய காலத்திற்கு வெகு முன்னதாகவே கூட்டுறவு முறையில் திட்டமிடப்பட வேண்டும். திட்டமிடுதலில், தொடர்புடைய ஒவ்வொருவரையும் ஈடுபடுத்துங்கள். இரண்டாவது, ஒருங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சி ஒன்று தொடங்கப்பட்டால், யாரேனும் ஒருவரிடம் அதை ஒப்படைத்து, திட்டமானது வெற்றிகரமாய் நிறைவேற்றப்படுவதைக் காண்பதற்கு, அதிகாரத்தையும் நிதியையும் அவருக்கு அனுமதியுங்கள். மூன்றாவது, அந்த நிகழ்ச்சி/திட்டம் பற்றி சபைக்குத் தகவல் அளியுங்கள்; நல்ல செய்தித் தொடர்பு என்பது சபையின் வெற்றிகரமான ஊழியத்திற்குத் திறவுகோலாய் உள்ளது. நான்காவது, தூண்டுதலில் இணங்கச் செய்வதில் மற்றும் உறுப்பினர்கள் அப்பணியில் ஈடுபாடுள்ளவர்களாகும்படி ஏவுதலில் முயற்சிகள் சிலவற்றைச் செலவிடுங்கள். ஐந்தாவது, மேம்படுத்துதல் அவசியமானதாக உள்ளது. திட்டங்களை உறுப்பினர்கள் மத்தியில் மேம்படுத்துங்கள், மற்றும் சபைக்குப் புறம்பே உள்ளவர்களுக்கு அவற்றை வெளிப்படுத்தி அறிவியுங்கள். ஆறாவது பணியை தொடக்கத்திலிருந்து முடிவு வரை மேற்பார்வையிடுங்கள். ஒரு நல்ல தொடக்கம் என்பது அவசியமானதாக உள்ளது, ஆனால் அது மட்டுமே போதுமானதாயிருப்பதில்லை. எந்த திட்டத்திற்கும் தொடர்ந்த கவனம் தேவைப்படுகின்றது. தொடர்ந்த மேம்படுத்துதல் உட்பட நீடிய பொறுமை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மேலும், திட்டத்திற்கு ஒரு முடிவைத் திட்டமிடுதலும் முக்கியமானதாக உள்ளது. விளைவுகளைக் கொண்டாடுங்கள், மற்றும் நிறைவேற்றப்பட்ட நற்செயலுக்காகத் தேவனைத் துதியுங்கள். ஏழாவது, எந்த ஒரு நிகழ்ச்சியும் முடிக்கப்பட்ட பின்பு அது மதிப்பீடு செய்யப்பட வேண்டும்: "இதை நாம் இன்னும் சிறப்பாக எவ்வாறு செய்திருக்கக் கூடும்? இதை நாம் மீண்டும் செய்தால், எவ்வாறு நாம் மேம்படுத்த முடியும்?" நிகழ்ச்சியிலிருந்து

பெறப்பட்ட அனுபவத்திலிருந்து அடுத்த முயற்சிக்கான புதிய திட்டங்கள் ஏற்படுத்தப்பட முடியும்.

## முடிவுரை

ஒரு சபைக்கோ அல்லது ஒரு சபை நடத்துனருக்கோ, எண்ணிக்கைகள் என்பவை வெற்றிக்கான முழு அடிப்படைத் தத்துவமாய் இருப்பதில்லை. எண்ணிக்கைகள் என்பவை எப்பொழுதுமே ஒரு நடத்துனரின் வெற்றிக்கு அளவீடாய் இருந்திருந்தால், நோவாவும், எரேமியாவும் கண்கண்ட தோல்வியாளர்களாகவே கருதப்பட்டிருப்பார்கள். இயேசுவின் வாழ்வின் முடிவில், அவர் சிலுவையில் அறையப்பட்டிருக்கையில் மற்றும் எல்லா சீஷர்களும் அவரைக் கைவிட்டுச் சென்ற பின் - ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்தும் இன்னொருவர் அவரை மறுத்தலித்தும் இருந்தார்கள் - அவரது ஊழியம் தோல்வியாயிற்று என்று காண்பது மற்றவர்களுக்குச் சுலப மானதாய் இருந்திருக்கும்.

ஒரே ஒரு ஆத்துமாவை மட்டும் மீட்புக்குட்படுத்தி சபை வளருவதைக் காண்பதில் பங்கெடுத்தல் என்பது எவ்வளவு மகிழ்வானதாயிருக்கும்! உங்கள் விசுவாசம் மற்றும் ஊக்கமான முயற்சியின் காரணமாக சபை வளர்ந்துள்ளது, இதன் விளைவாக, வேறெந்த வழியிலும் இயலாத நிலையில், பலர் பரலோகத்தில் இருப்பார்கள் என்பதை அறிவதில் உள்ள பரவசத்தைக் கற்பனை செய்து பாருங்கள்! நாம் ஞானத்துடன் திட்டமிட்டு செயல்பட்டால், நன்றாக - “நோக்கமின்றி” அல்ல (1 கொரி. 9:26), ஆனால் எப்படிக் “கட்டியெழுப்புவது” என்பதில் “புத்தியுள்ள சிற்பாசாரிகள்” போல (1 கொரி. 3:10) செயல்பட்டால், “எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும் படிக்கு” எல்லாருக்கும் எல்லாமுமானால் (1 கொரி. 9:22) அந்தப் பரவசமான சிந்தனை நம்முடையதாக முடியும்.

---

*குறிப்புகள்:*

[1]Darrel G. Rickard, “The Lord’s Church Is Marching,” in the bulletin of the Tenth and Rockford Church of Christ, Tulsa, Oklahama (7 June 1964). [2]Flavil R. Yeakley, Jr., “Churches of Christ Growing Again,” *The World Evangelist 19* (August 1990): 1. [3]இதே செயல் முறையானது ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் திட்டமிட உதவுவதில் பயன்படுத்தப்பட முடியும் என்றாலும், இந்தப்படிகள் எண்ணிக்கை வளர்ச்சி பற்றிய அடிப்படைப் பணியாற்றுபவைகளாகவே உள்ளன, மற்றும் இங்கு ஏற்படுத்தப்படும் ஆலோசனைகள் ஆவிக்குரிய வளர்ச்சியிலிருந்து விலக்கிச் செல்லாது. பாடத்தின் எஞ்சியுள்ள பகுதியானது எண்ணிக்கை அளவின் வளர்ச்சியை வலியுறுத்தினாலும், இது தர அளவின் வளர்ச்சியை விட முக்கியமானது என்று இப்பாடம் முறைமுகமாய் உணர்த்துவதாக நாம் நோக்கம் கொள்ளக் கூடாது. [4]C. Wayne Zunkel, *Growing the Small Church - A Guide for Church Leaders* (Elgin, Ill.: David C. Cook, 1982), 23. [5]For more information on the subject, See "Goal Setting," *Truth for Today* (December 1994), 47-50. [6]மிகவும் ஏற்புடைய எண்ணிக்கை பயன்படுத்தப்பட வேண்டும். இது

ஆண்டிறுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையாய் இருக்கலாம். கிறிஸ்துவின் சபைகளில் பெரும்பாலானவற்றிற்கு, சபை வளர்ந்துள்ளதா இல்லையா மற்றும் ஆம் என்றால் எவ்வளவாக வளர்ந்துள்ளது என்பவற்றைத் தீர்மானிப்பதில், ஞாயிறு காலை வருகை தந்தவர்களின் எண்ணிக்கையானது ஒரு வேளை மிகவும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். எவ்விதப் புள்ளியியல் முறைமை தேர்ந்தெடுக்கப் பட்டாலும், அது நிலையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். [7]“சபை வளர்ச்சிக்குத் திட்டமிடுங்கள்” என்ற ஆறாம் படியின்மீதும், “திட்டங்களைச் செயல்படுத்துங்கள்” என்ற ஏழாம் படியின்மீதும் அதிக தகவல்களைப் பெறுவதற்கு “நிர்வாகம்” என்ற பாடத்தைக் காணவும். [8]“ஈடுபாட்டை உற்சாகப்படுத்துதல்” என்ற பாடத்தில் காணவும். [9]“விழுந்து போகுதலின் பிரச்சனையைத் தீர்த்தல்” என்ற பாடத்தில் காணவும்.